ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : **85-T**
**Code No. : 85-T**

**CCE PR**

# ವಿಷಯ : ಸಮಾಜ ವಿಜ್ಞಾನ
# Subject : SOCIAL SCIENCE

**( ತಮಿಳು ಭಾಷಾಂತರ / Tamil Version )**

**( ಹೊಸ ಪಠ್ಯಕ್ರಮ / New Syllabus )**

**( ಪುನರಾವರ್ತಿತ ಖಾಸಗಿ ಅಭ್ಯರ್ಥಿ / Private Repeater )**

**பொதுவான குறிப்புகள் :**

i) இந்த வினா-விடைத்தாள் தொகுப்பானது புறவய மற்றும் அகவய வகை (Objective and Subjective) வினாக்கள் 57-ஐ கொண்டுள்ளது.

ii) ஒவ்வொரு புறவயவகை (Objective type) வினாவிற்கான விடையை எழுத இடம் தரப்பட்டுள்ளது. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அந்த விடைக் குறியீட்டு எழுத்துடன் விடையை முழுவதுமாக தரப்பட்டுள்ள இடத்தில் எழுத வேண்டும்.

iii) அகவய வினாக்களின் (Subjective type questions) விடைகளை எழுதுவதற்கென போதுமான இடம் தரப்பட்டுள்ளது. கொடுக்கப்பட்டுள்ள இடத்திற்குள்ளாகவே நீவிர் விடையளிக்க வேண்டும்.

iv) புறவய மற்றும் அகவய வினாக்களுக்கு எதிராக தரப்பட்டுள்ள குறிப்புகளை கடைபிடிக்கவும்.

v) மாணாக்கர்கள் விடைகளை பென்சி ல் எழுதக்கூடாது. பென்சிலால் எழுதப்பட்ட விடைகள் மதிப்பீடு செய்யப்பட மாட்டாது. (வரைபடங்கள், படங்கள் மற்றும் மேப்புகள் தவிர)

vi) பல்விடை வினாக்கள் (Multiple choice questions), கோடிட்ட இடத்தை நிரப்புதல் மற்றும் பொருத்துக வகை வினாக்களின் விடைகளில் சுரண்டுதல் / திரும்ப எழுதுதல் / குறியிடுதல்கள் அனுமதிக்கப்படாது. இவ்வாறு செய்தால் அவை மதிப்பீடு செய்யப்பட மாட்டாது.

vii) மாணாக்கர்கள் வினாத்தாளை படிப்பதற்கென கூடுதலாக 15 நிமிடங்கள் தரப்பட்டுள்ளது.

viii) வலது பக்க ஓரத்தில் தரப்பட்டுள்ள இடத்தில் எதுவும் எழுத வேண்டாம்.

I. பின்வரும் வினாக்கள் / மற்றும் முழுமைபெறாத கூற்றுகளுக்கு நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்றே ஒன்று சரியானது அல்லது பொருத்தமானது. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அவ்விடையினை அதற்கென தரப்பட்டுள்ள இடத்தில் விடைக் குறியீட்டு எழுத்துடன் முழுவதுமாக எழுத வேண்டும். $10 \times 1 = 10$

1. **"அ"** பிரிவில் நபர்களின் பெயர்களும், **"ஆ"** பிரிவில் அவர்கள் வகித்த பதவி மற்றும் ஆற்றிய பணிகள் குறித்த குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. சரியான விடையைக் கண்டுபிடித்து பொருத்தமான இணையை எழுதுக.

| **பிரிவு-அ** | **பிரிவு-ஆ** |
|---|---|
| (a) பாசில் அ | (i) சிற்றரசு மாநிலங்களின் இணைப்பு |
| (b) ஷேக் அப்துல்லா | (ii) முதல் இந்தியக் குடியரசுத் தலைவர் |
| (c) Dr. பாபு ராஜேந்திர பிரசாத் | (iii) மாநில மறுசீரமைப்புக் குழு |
| (d) சர்தார் வல்லபாய் பட்டேல் | (iv) தேசிய மாநாட்டுக் கட்சி. |

| | *a* | *b* | *c* | *d* |
|---|---|---|---|---|
| (A) | i | iii | iv | ii |
| (B) | iv | i | iii | ii |
| (C) | ii | i | iv | iii |
| (D) | iii | iv | ii | i |

2. சீனாவில் நடைபெற்ற கீழ்வரும் எந்த நிகழ்ச்சி உலக வரலாற்றில் மிக முக்கியமான இராணுவ நிகழ்ச்சியாக குறிப்பிடப்படுகிறது ?

(A) நீண்ட பயணம் (Long March ) (B) தாவிடும் முன்னேற்றக் கொள்கை

(C) பண்பாட்டுப் புரட்சி (D) மக்களாட்சிக்கான புரட்சி.

3. இந்தியா அணிசேராக் கொள்கை என்ற அயல்நாட்டுக் கொள்கையை பின்பற்றுகிறது. இதன் பொருள் யாதெனில்

(A) அமெரிக்க வல்லரசோடு இணைவது

(B) இரு வல்லரசு நாடுகளுக்கிடையே சமமான இடைவெளியைப் பின்பற்றுவது

(C) ரஷ்ய வல்லரசோடு இணைவது

(D) நாடு விரிவுபடுத்தும் கொள்கையைப் பின்பற்றுவது.

4. ஐ.நா. சபையின் எந்த உறுப்பு உலகப் பாராளுமன்றம் என அழைக்கப்படுகிறது ?

(A) செயலகம் (B) பாதுகாப்பு சபை

(C) பொதுச் சபை (D) அறக்கட்டளை சபை.

5. நமது அரசியலமைப்புச் சட்டத்தின் 24 வது சட்டப்பிரிவு அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. காரணம், அது

(A) தீண்டாமையை ஒழிக்கிறது

(B) 14 வயது வரை குழந்தைகளுக்கு இலவச மற்றும் கட்டாயக் கல்வியை வழங்குகிறது

(C) வரதட்சணை முறையைத் தடுக்கிறது

(D) 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவது தண்டிக்கப்படக் கூடிய குற்றம் என அறிவிக்கிறது.

6. ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் காய்கறிகள் மற்றும் பருப்பு வகைகளைப் பயிரிடும் முறை எந்த வகை வேளாண்மைக்கு சிறந்த உதாரணம் ஆகும் ?


(A) காரிப் பயிர் வேளாண்மை

(B) ராபி பயிர் வேளாண்மை

(C) ஜேட் பண்ணை வேளாண்மை

(D) வாழ்க்கை ஆதாரமான வேளாண்மை.

7. இந்திய தரைப்படத்தில் குறிக்கப்பட்டுள்ள சரியான இடங்களின் இணையைக் கண்டுபிடி :




(A) a — கொல்கத்தா, b — சூரத், c — விசாகப்பட்டினம்

(B) a — சூரத், b — கொல்கத்தா, c — விசாகப்பட்டினம்

(C) a — விசாகப்பட்டினம், b — சூரத், c — கொல்கத்தா

(D) a — கொல்கத்தா, b — விசாகப்பட்டினம், c — சூரத்

8. இந்தியாவில் தயாரிக்கப்படும் வரைவு ஐந்தாண்டு திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கும் அமைப்பு எது ?

(A) தேசிய திட்டக்குழு (B) மத்திய நிதித்துறை

(C) தேசிய வளர்ச்சிக் கழகம் (D) இந்திய ரிசர்வ் வங்கி.

9. ஒரு நபர் எதிர்காலத்தில் ஒரு காரை வாங்கும் நோக்கத்துடன் பணத்தைத் தொடர்ச்சியாக சேமிக்கத் தொடங்கப்படும் வங்கி கணக்குமுறை எவ்வகையைச் சார்ந்தது ?

(A) சேமிப்பு கணக்கு

(B) நடப்புக் கணக்கு

(C) தொடர் வைப்புத்தொகை கணக்கு

(D) பருவ வைப்புத்தொகை கணக்கு.

10. NASDAQ - ன் பட்டிய ல் சேர்க்கப்பட்ட முதல் இந்திய நிறுவனம் எது ?

(A) ரிலையன்ஸ் கம்பெனி

(B) இன்போசிஸ் தொழில்நுட்ப நிறுவனம்

(C) விப்ரோ தொழில்நுட்ப நிறுவனம்

(D) பயோகான் நிறுவனம்.

II. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு வாக்கியத்தில் விடையளி : $14 \times 1 = 14$

11. இந்திய வரலாற்று ஆசிரியர்கள் ஏன் வாய்மொழி வரலாற்றுக்கு அதிக முக்கியத்துவம் தருகிறார்கள் ?

12. கால்சா இராணுவ வீரர்கள் ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடக் காரணமென்ன ?

13. எந்த ஐரோப்பிய நாடு இந்தியாவின் ஒரு பகுதி மீது நீண்ட காலமாக ஆட்சி புரிந்தது ?

14. கிராமப்புறப் பெண்களின் முன்னேற்றத்திற்கு கருநாடக அரசு நடைமுறைப்படுத்திய திட்டம் எது ?

15. “ஐக்கிய நாடுகள்” ( United Nations ) என்ற சொல்லை முதன்முத ல் பயன்படுத்தியவர் யார் ?

16. சமுதாயப் படிநிலை முறைகள் என்றால் என்ன ?

17. குழந்தைத் தொழிலாளர் என்போர் யாவர் ?

18. ஒரு குறிப்பிட்ட பருவக்காலத்தில் இந்தியாவின் பெரும்பகுதி மழையைப் பெற்றாலும் அப்பருவக்காலத்தில் தமிழ்நாடு மழையைப் பெறுவதில்லை. அது எந்த பருவக் காற்றுக் காலம் ?

19. டெக்கன் ட்ராப் ( Deccan Trap ) பகுதியில் காணப்படும் மண் என்ன ?

20. தற்போது நமது நீர்நிலைகளில் அதன் கொள்ளளவு ஏன் குறைந்து வருகிறது ?

21. வாழ்க்கைக்கு ஆதாரமான வேளாண்மை என்றால் என்ன ?

22. இந்தியாவில் பசுமைப் புரட்சியின் முன்னோடியெனப் போற்றப்படுபவர் யார் ?

23. நேர்முக வரிகள் ( Direct Taxes ) யாவை ?

24. 'ஒரு தொழில்முனைவோர் ( Entrepreneur ) நாட்டின் சொத்தாக ஏன் கருதப்படுகிறார்' ? எவ்வாறு ?

III. பின்வரும் வினாக்களுக்கு இரண்டு அல்லது நான்கு சொற்றொடர்களில் விடை எழுதுக : $25 \times 2 = 50$

25. "அறிவியல் வளர்ச்சி கடல் பயணத்திற்கு எவ்வாறு வழி வகுத்தது ?" இக்கூற்றை வ யுறுத்துக.

26. ஸ்ரீரங்கப்பட்டிண உடன்படிக்கையின் நிபந்தனைகள் யாவை ?

27. இந்திய சமூகத்திற்கு அன்னி பெசன்ட் அம்மையார் ஆற்றிய பணிகள் யாவை ?

*அல்லது*

இசுலாமிய சமூகத்திற்கு சர் சையத் அகமது கான் ஆற்றிய பணிகள் யாவை ?

28. ரஷ்ய நாட்டில் ஸ்டா ன் கொண்டுவந்த சீர்திருத்த மாற்றங்கள் யாவை ?

29. கற்றோர் எண்ணிக்கையைப் பெருக்க அரசு மேற்கொண்ட ஏதேனும் நான்கு திட்ட நடவடிக்கைகளை எழுதுக.

30. "மனித உரிமைகளை நிலைநாட்ட இந்தியா எவ்வாறு முழுமூச்சுடன் செயல்படுகிறது ?" இக்கூற்றை நியாயப்படுத்துக.

31. பெண்களுக்கு அதிகாரமளித்த ல் பெண்களின் சுய உதவிக்குழுக்களின் முக்கியத்துவம் குறித்து எழுதுக.

32. இந்திய தீபகற்ப பீடபூமியின் பொருளாதார முக்கியத்துவங்கள் யாவை ?

33. இந்தியாவில் காணப்படும் ஏதேனும் நான்கு வகை காடுகளைக் குறிப்பிடுக.

34. மின்ஆற்றல் வளங்களின் பற்றாக்குறையைப் போக்க எடுக்கப்பட்ட பரிகார நடவடிக்கைகள் யாவை ?

35. புவியியல் தகவல் முறையின் ( Geographical Information System ) பயன்கள் யாவை ?

36. வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை ?

37. கட்டுக்கடங்காத மக்கள்தொகைப் பெருக்கம் எவ்வாறு நமது நாட்டின் வளர்ச்சிக்குத் தீங்கு விளைவிக்கிறது ?

38. "தனிநபர் வருமானம் ஏன் வளர்ச்சியின் குறியீடாக அமையவில்லை?" காரணங்கள் கூறுக.

39. உலகமயமாத ன் நான்கு முக்கியப் பண்புகளை எழுதுக.

40. மும்பை கருநாடகப் பகுதிகள் யாவை ?

41. பாலகங்காதரத் திலகர் வெளியிட்ட இரு செய்தித்தாள்கள் யாவை ?

42. இந்திய விடுதலைக்காக அண்ணல் காந்தியடிகள் நடத்திய ஏதேனும் இரண்டு முக்கிய போராட்ட இயக்கங்களை எழுதுக.

43. ஏதேனும் நான்கு மண்டல ஒத்துழைப்பு / கூட்டுறவு சங்கங்களின் பெயர்களை எழுதுக.

44. நிறவெறி இனக்கொள்கையை எதிர்த்துப் போராடிய முக்கியத் தலைவர்கள் யாவர் ?

45. வேலையின்மையின் வகைகள் யாவை ?

46. இமாச்சல் (மத்திய இமயமலை) பகுதியில் காணப்படும் முக்கிய மலை வாழிடங்கள் ( hill stations ) யாவை ?

47. இந்தியாவில் காணப்படும் அணு கனிம வளங்கள் ( atomic minerals ) யாவை ?

48. மனித வளர்ச்சியின் காட்டிகள் ( குறியீடுகள் ) யாவை ?

49. ஒரு வங்கியில் தொடங்கப்படும் பல்வகை வங்கி கணக்குகள் யாவை ?

IV. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் ஆறு அல்லது எட்டு வாக்கியங்களில் விடை தருக : $6 \times 3 = 18$

50. 'கி.பி. 1857இல் நடைபெற்ற முதல் இந்திய சுதந்திரப் போர் மிகப் பெரிய விளைவுகளை ஏற்படுத்தியது' விவரி.

*அல்லது*

"போக்குவரத்து மற்றும் தகவல்தொடர்பு துறைகளில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் இந்திய விடுதலை இயக்கத்திற்கு வழிவகுத்தன." விவரி.

51. இந்திய அயல்நாட்டுக் கொள்கையின் அடிப்படை அம்சங்கள் யாவை ?

*அல்லது*

இந்தியா பிற நாடுகளுடன் ஏன் நல்ல உறவை மேற்கொள்ள வேண்டும் ?

52. தீண்டாமையைப் பூண்டோடு ஒழிக்க அரசியலமைப்பு மற்றும் சட்ட ரீதியாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை

*அல்லது*

முறைப்படுத்தாத பணியாளர்களின் பிரச்சனைகள் யாவை ?

53. இந்தியாவின் கிழக்கு மற்றும் மேற்கு கடற்கரையில் அமைந்துள்ள முக்கியத் துறைமுகங்களை தனித்தனியே பட்டிய டுக.

*அல்லது*

ஓரிடத்தில் தொழிற்சாலையமைக்கத் தேவைப்படும் வசதியான காரணிகள் யாவை ?

54. அதிகார பகிர்வு முறையில், கிராம சுயராஜ்யத்தைப் பற்றி அண்ணல் காந்தியடிகளின் கருத்து குறித்து விளக்குக.

*அல்லது*

மத்திய அரசின் வரிகளற்ற வருமானங்களின் அம்சங்களைக் குறிப்பிடுக.

55. வங்கியின் செயல்பாடுகள் யாவை ?

*அல்லது*

ஆயுள் காப்பீட்டுறுதி ஆவணம் ( insurance policy ) பெறும் வழிமுறைகள் யாவை ?

V. பின்வரும் வினாவுக்கு எட்டு அல்லது பத்து வாக்கியங்களில் விடை தருக : 4

56. "விடுதலை இந்தியாவின் வளர்ச்சி திட்டங்களின் முன்னோடியாக நேரு விளங்குகிறார்." விளக்குக.

VI. 57. இந்தியத் தரைப்படம் வரைந்து, பின்வருமிடங்களைக் குறிக்கவும் : 1 + 3 = 4

a) $82\frac{1}{2}^{\circ}$ கிழக்கு தீர்க்கரேகை

b) பக்ரா நங்கல் அணை

c) நர்மதா பள்ளத்தாக்கு அணைத்திட்டம்.

**பார்வைத்திறன் குறைபாடுள்ள மாணவர்களுக்கான மாற்று வினா : (வினா எண் 57க்கு மாற்று வினா)** 4

இமய மலையினால் ஏற்படும் நன்மைகள் ( Advantages ) யாவை ?